பெறுநர் 25.10.2017

இயக்குநர் / நிதி,
தலைவர்,
வாரிய ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 2.

ஐயா,

பொருள் 01.12.2015 முதல் அமுல்படுத்தப்படவேண்டிய ஊதிய உயர்வு மற்றும்
வேலைபளு – சங்கத்தின் முன்மொழிவு சமர்ப்பிக்கப்படுகிறது.

-------------------

01.12.2015 முதல் அமுல்படுத்தப்படவேண்டிய ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு குறித்து எங்களது சங்கத்தின் சார்பாக ஏற்கனவே 23.09.2017 அன்று முன்மொழிவு கடிதத்தினை வழங்கியுள்ளோம். இது குறித்து கீழ்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்துகின்றோம்.

**<u>1.ஊதிய உயர்வு</u>**

1. 01.01.2016 அன்று பணியாளர்கள் பெற்று வரும் அடிப்படை ஊதியம் மற்றும் தரஊதியத்ததை 2.57 மடங்காக உயர்த்தி வழங்கிடுவது. 125% அகவிலைப்படியினை 01.01.2016 –ல் இணைத்திடுவது மற்றும் 01.01.2016-க்கு பின் அரசு ஊழியருக்கு இணையாக உயர்த்தப்படும் அகவிலைப்படியினை வழங்குவது என்ற வாரிய முன்மொழிவுகளை ஏற்றுக் கொள்கிறோம்.
2. 01.12.2015-க்கும் 31.12.2015-க்கும் இடைப்பட்ட காலத்திற்கு ஒரு தொகையினை (Lumpsum) ஊதிய உயர்வாக வழங்கி ஈடுகட்ட வேண்டும்.
3. 01.12.2015-க்கும் 31.12.2015-க்கும் இடைப்பட்ட காலத்தில் இறந்துவிட்ட / ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு 01.01.2016 நாளிட்டு கருத்தியலாக ஊதியம் நிர்ணயித்து ஓய்வூதியப் பலன்களை வழங்கிட வேண்டும்.
4. 01.01.2016-க்கும், ஊதிய உயர்வை அமுல்படுத்தும் நாளுக்கும் இடைப்பட்ட காலத்திற்கான நிலுவைத் தொகையினை முழுமையாக வழங்கிட வேண்டும்.
5. ஊதிய உயர்வு ஒப்பந்தங்களில் வாடிக்கையாக வழங்கப்படும் பணிக்கால ஆண்டுயர்வு ( Service weightage) வழங்கிட வேண்டும்.
6. இளம்நிலைப்பொறியாளர் 2-ம் நிலை பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் இருந்து வரும் குறையினை சரிசெய்ய வேண்டும்.(கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)
7. வாரிய உதவி பிரிவு அலுவலர், தலைமை பட வரைவாளர், மருந்தகத்தில் பணிபுரியும் செவிலியர், மருந்தாளுனர்களுக்கு தமிழக அரசில் வழங்கப்படும் ஊதியத்திற்கு நிகரான ஊதியம் வழங்கப்படவேண்டும்.(கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)
8. வாரியத்தில் சிறப்ப காலமுறை ஊதியம் பெற்று வரும் பகுதிநேர துப்புறவு பணியாளர்களுக்கு தமிழக அரசு நிர்ணயித்துள்ள ஊதியத்திற்கு நிகரான ஊதியத்தையும், தமிழக அரசில் வழங்கப்படும் சலுகைகளையும் வழங்கிடவேண்டும்.(கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)

**2.படிகள்**

1. வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி , மருத்தவப்படி உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள அனைத்துப்படிகளையும், அதே அளவில் வாரிய பணியாளர்களுக்கும் உயர்த்தி வழங்கப் படும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.



2. மேற்படி படிகள் நீங்கலாக வாரிய ஊழியர்கள் தற்போது பெற்று வரும் அனைத்து படிகள் மற்றும் சிறப்பு ஊதியங்களை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கிட வேண்டும்.
3. களப்பிரிவு ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சைக்கிள்படி ரூ.100-ஐ இருசக்கர வாகனப்படியாக உயர்த்தி மாதம் ரூ.1000- வழங்கப்பட வேண்டும்.
4. பணியாளர்கள் அனைவருக்கும் கைபேசி (Mobile Phone) படியாக மாதம் ரூ.300- வழங்கப்பட வேண்டும்.

5. களப்பிரிவு பணியாளர்கள் வேலை நேரத்திற்கு முன்பும், பின்பும் மற்றும் விடுப்பு நாட்களிலும் மின்தடைகளை (Break down) நீக்க பணிபுரிவதை ஈடுகட்ட Break down சிறப்பு ஊதியம் அல்லது படி வழங்கப் பட வேண்டும்.

## 3. வேலை பளு

### அ.களப்பிரிவு

1. புறநகர் பிரிவின் மின்மாற்றிகள்/யூனிட் கணக்கிட தற்போது 63-KVA -க்கு கீழ் ¼ யூனிட் எனவும், 63-KVA -க்கு மேல் 1 யூனிட் எனவும் அறிவித்துள்ளமை இரத்து செய்து ஏற்கனவே உள்ளபடி 100-KVA மற்றும் அதற்கு கீழ் உள்ள மின்மாற்றிகளை 1 யூனிட் எனவும், அதற்கு மேல் உள்ள பளுவினை 100- ஆல் வகுத்து யூனிட் கணக்கிடப்படும் நடைமுறையினை தொடர்ந்து கடை பிடித்திட வேண்டும்.

2. தற்போது 110 கி.வோ. துணைமின் (Non-grid) நிலையத்திற்கு அனுமதிக்கப் பட்டுள்ள இரண்டு மின்பாதை ஆய்வாளர் பொறுப்பினை தொடர்ந்து அனுமதித்திட வேண்டும்.

3. Fuse of call centre–களுக்கு தற்போது அனுமதித்துள்ள Telephone operator/Commercial Asst. பொறுப்பினை தொடர்ந்து அனுமதித்திட வேண்டும்.

4. ஒவ்வொரு மாவட்ட தலைமையகத்திலும் ஒரு Fuse of call centre–ஐ நிறுவிட வேண்டும்.

5. புறநகர் மற்றும் மலைப்பகுதி பிரிவு அலுவலகங்களில் தற்போது இருந்து வரும் இரண்டு முகவர் 1-ம் நிலை பொறுப்புகளில் ஒரு முகவர் 1-ம் நிலை பொறுப்பினை சிறப்பு நிலை முகவர் பொறுப்பாக உயர்த்திட வேண்டும்.

6. துணைகோட்ட அலுவலகங்களில் தற்போது இருந்து வரும் ஒரு வணிக ஆய்வாளர், ஒரு வணிக உதவியாளர் பொறுப்புகளில் வணிக உதவியாளர் பொறுப்பினை வணிக ஆய்வாளர் பொறுப்பாக உயர்த்திட வேண்டும்.

7. கோட்டம் மற்றும் துணை கோட்டங்களுக்கு கீழ்கண்டவாறு அளவீடுகள் நிர்ணயம் செய்திட வேண்டும்.

(அ) கோட்டம் - 4 துணை கோட்டங்கள்,
(ஆ) துணை கோட்டம் - 4 பிரிவுகள் ( கட்டுமானம், மேம்பாடு பிரிவு, 110 கி.வோ. துணைமின் நிலையம் (Non-grid) உட்பட

8. ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு கட்டுமானப் பிரிவு அனுமதித்திட வேண்டும். அந்த கட்டுமானப் பிரிவில் ஒரு துணை கோட்டத்திற்கு ஒரு (Gang) என்றும் ஒரு Gang –க்கு 1 மின்பாதை ஆய்வாளர், 4 கள உதவியாளர்களை அனுமதித்திட வேண்டும்.

### (ஆ) அட்டைப்பட்டியல் பிரிவு

1. தற்போது உள்ளபடி ஒரு பிரிவு அலுவலகத்திற்கு ஒரு கணக்காய்வாளர் பொறுப்பினை தொடர்ந்து அனுமதித்திட வேண்டும்.

2. கணக்காளர் ( வசூல் பணி) பொறுப்புக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடமைகளும் பொறுப்பில் முரண்பாடுகண் உள்ளதை களையப்பட வேண்டும்.

3. ஒரு துணை கோட்டத்திற்கு ஒரு கணக்கீட்டு அலுவலர் பொறுப்பினை உருவாக்கிட வேண்டும்.

4. தற்போது மத்திய அலுவலகத்தில் உள்ள கணக்கீட்டு அலுவலர் பொறுப்பினை முதுநிலை கணக்கீட்டு அலுவலர் ( Senior Assessment Officer ) என கணக்கு அதிகாரி பொறுப்புக்கு



நிகராக உயர்த்திட வேண்டும். இவருக்கு உதவியாக ஒரு கணக்கீட்டு ஆய்வாளர் (அல்லது) வருவாய்மேலாளர் பொறுப்பு உருவாக்கப்பட வேண்டும்.

### (இ) வருவாய்ப்பிரிவு

1. வருவாய்பிரிவிற்கு அதிகபட்சமான மின்இணைப்பு ஒரு லட்சம் என நிர்ணயித்து அதற்கு மேல் மின் இணைப்புகள் உள்ள வருவாய் பிரிவிற்கு கூடுதலாக பொதுப்பிரிவு ( General Section) பொறுப்புகளை அனுமதித்திட வேண்டும்

2. வேலைபளு ஒப்பந்தப்படி வருவாய் பிரிவிற்கு அனுமதிக்கப்படும் கணக்கு மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட எந்த ஊழியரையும் வேறு எந்த அலுவலகங்களுக்கும் தற்காலிக பணியிடமாற்றம் ( Temporary Diversion) செய்யக்கூடாது என ஒப்பந்தத்தில் உறுதி படுத்தப்படவேண்டும்.

3. ஒவ்வொரு கணக்கு மேற்பார்வையாளருக்கும் ஒரு கணினி மற்றும் அச்சுப்பொறி (System and printer) வழங்க வேண்டும்.

4. பிரிவு அலுவலகங்களில் ஆய்வு செய்ய வேண்டிய பணிகள், மின் இணைப்புகளில் ஆய்வு செய்ய வேண்டிய பணிகளை எளிமையாக்கி நிர்ணயித்திட வேண்டும். (viz Physical verification of D.L. & Nil Consumption)

5. மின்இணைப்பு ஆவணங்களை மின்னணு முறையில் (Electronical Document) பாதுகாத்திட ஒவ்வொரு வருவாய்பிரிவிற்கும் ஒரு ( Scaning mechine) வழங்கப்படவேண்டும்.

6. ஒவ்வொரு வருவாய்பிரிவிற்கும் ஒரு அலுவலக உதவியாளர்( Office Helper ) ஒரு பதிவு எழுத்தர் (Record Clerk) பொறுப்பினை அனுமதித்திட வேண்டும்.

**(ஈ) பண்டக சாலைப் பிரிவு**

1. பண்டகசாலைப் பிரிவு வேலை பளுகுறித்து 06.09.2017 அன்று வாரியத்தால் வழங்கப்பட்ட முன்மொழிவினை அப்படியே அமுல் படுத்திட வேண்டும்.

**(உ) செலவினப்பகுதி**

1.மத்திய அலுவலகம் உள்ளிட்ட செலவினப்பகுதி / நிர்வாகப்பகுதிக்கு தொழில் தீர்ப்பாய தீர்ப்பின்படி வேலைபளுவினை நிர்ணயம் செய்து இந்த வேலைபளு ஒப்பந்தத்திலேயே சேர்த்திட வேண்டும்.

**4. பதவி உயர்வு வாய்ப்புகள்**

1. பதவி உயர்வில் தேக்கநிலையினை களைந்திட பணிக்காலத்தில் குறைந்தது மூன்று பதவி உயர்வுகளை உறுதி படுத்திட வேண்டும். (கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)

2. தகவல் தொழில் நுட்பம் தொடர்பான ( Assistant Programmer ) பொறுப்பிற்கு மேலாக பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்குதல் ( கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)

**5. ஒப்பந்தத் தொழிலாளர்**

ஒப்பந்தத்தில் விடுபட்டுப்போன ஒப்பந்தத்தொழிலாளர்களையும், தற்போது பணிபுரிந்து வரும் ஒப்பந்தத்தொழிலாளர்களையும் அடையாளம் கண்டு நிரந்தரப்படுத்திட வேண்டும். ( கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)

**6. பொது**

1. ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்படும் அனைத்து பொறுப்புகளையும் 3 மாத காலத்திற்குள் அனுமதித்து 6 மாத காலத்திற்குள் நிரப்பிட வேண்டும்.

2. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி திங்களில் உள்ள மின் இணைப்புகள் / மின் மாற்றிகள் அடிப்படையில் மறுகணக்கீடு செய்து புதிய பொறுப்புகளை அனுமதித்திட வேண்டும்.

3. ஒப்பந்தக்காலத்தை 4 ஆண்டுகள் என வரையறுத்திட வேண்டும்.

4. வேலைபளுவில் அனைத்து பணிகளையும் வரையறுத்துவிட்டு அதற்கு மேலும் ஒரு பொதுவான வரையரையினை (Omni Bus Clause) தவிர்த்திட வேணடும்.

5. ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதிய உயர்வினை 01.01.2016 முதல் தமிழக அரசு ஓய்வூதியர்களுக்கு நிகராக வழங்கிட வேண்டும்.



6. ஓய்வூதியர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை விரைவாக அமுல் படுத்திட வேண்டும்.

7. 01.04.2003 க்கு முன்பு ஒப்பந்த தொழிலாளராக பணியில் அமர்த்தப்பட்டு 01.04.2003க்கு பிறகு மின்வாரியத்தில் நிரந்தரம் பெற்றவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தினை அமுல்படுத்திட வேண்டும்.

8. 2009-ம் ஆண்டில் நேர் முகமாகவும், ஒப்பந்தத் தொழிலாளரிலிருந்தும் நியமிக்கப்பட்ட கள உதவியாளர்களிடையே உள்ள பொது முதன்மை ஏற்றத்தாழ்வினை களைந்திட வேண்டும்..

9. களப்பணியாளர்கள் வட்ட விருப்ப மாறுதலில் வரும் அனைவருக்கும் அவர்கள் மேற்கண்ட பொறுப்பில் முந்தைய வட்டத்தில் பணியாற்றிய காலத்தையும் சிறப்புநிலை / தேர்வு நிலைக்கு கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும்.

10. கணக்காளர் II–ம் நிலை பணிக் காலத்தை மேல் பதவி உயர்வு அனுபவத்திற்கு ( Experience) கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்